# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 387/2015.

## வழக்கு சாட்சி – அ.சா. 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கப்பாண்டி. | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னராஜ். | தொழில் | சிறப்பு சார்பு ஆய்வாளர்,<br>தேனி காவல் நிலையம். |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 52/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2024.

**( 1வது எதிரி ஆஜர். 2வது எதிரி இறந்துவிட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, தேனி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வரளாகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2015ம் தேதி, நான் பி.சி.பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியிலிருந்தபோது, தேனி மாவட்டம், அரண்மனைப்புதூர், கிழக்குத் தெருவைச் சேர்ந்த பரமசிவம் மகன் காமராஜ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரைப் பெற்று, சார்பு ஆய்வாளர் அவர்களுக்குத் தகவல் தெரிவித்து, அவர்களின் உத்தரவின்பேரில் நிலைய மனு எண். 359/2015 ன்படி மனுதாரருக்கு மனு ரசீது வழங்கினேன். பின்பு அம்மனுவை சார்பு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வளார் என்னை விசாரித்தார்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

அ.சா.1 எத்தனை மணியைப்போல் புகார் கொடுத்தார் என்று நான் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் நேரம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். சி.எஸ்.ஆர் 09.06.2015ம் தேதி

பதிவு செய்த விவரத்தையும் எனது மேலதிகாரிக்கு சொல்லியுள்ளேன். ஆனால், நேரம் பற்றி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எந்தவொரு புகாரையும் சொன்ன தேதி, நேரத்தில் பெறவில்லை என்றாலும், எனது மேலதிகாரியின் வேண்டுகோளின்படி, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.